இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1980 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, செங்கடகல எக்சத் பௌத்த மண்டல (கூட்டிணைத்தல்) சட்டம்.

[1980, சனவரி மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

1980, பெப்புருவரி மாதம் 01 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45

தபாற் செலவு : சதம் 25

1980 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, செங்கடகல எக்சத் பௌத்த மண்டல (கூட்டிணைத்தல்) சட்டம்

[1980, சனவரி மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 46/79
1245

## செங்கடகல எக்சத் பௌத்த மண்டலத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"செங்கடகல எக்சத் பௌத்த மண்டலம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினரால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தினோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதன்முன்னர் கண்டியில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டம் ஆக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, செங்கடகல எக்சத் பௌத்த மண்டல (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் இதனகத்துப் பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் செங்கடகல எக்சத் பௌத்த மண்டலத்தின் இப்போதுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனையாட்களும் இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் "செங்கடகல எக்சத் பௌத்த மண்டலம்" என்ற பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறுவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், வழக்குத் தொடுத்தலும் வேண்டும். அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கப்படலாம் என்பதுடன், தொடுக்கப்படலும் வேண்டும். அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தகுதியும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். செங்கடகல எக்சத் பௌத்த மண்டலத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்காய பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பௌத்த மதத்தை வளர்த்தலும், பௌத்த மதத்தினரின் விசேட சிறப்புரிமைகளைப் பாதுகாத்தலும் ;

(ஆ) கண்டி மாவட்டத்திலுள்ள பௌத்த மதத்தினரிடையே பரஸ்பர ஒத்துழைப்பையும் ஐக்கியத்தையும் மேம்படுத்துதலும், அந் நோக்கத்துக்காகப் பௌத்த மதச் சங்கங்களை ஒருங்கிணைத்தலும் ;

(இ) பௌத்த மதக் கோட்பாடுகளுக்கு இணங்கச் சமூகசேவை புரிதலும், அந்நோக்கத்துக்காகப் பௌத்த மதத்தினர் பங்குபற்றலை ஊக்குவித்தலும் ;

(ஈ) பௌத்த மதத்தினரின் உடல்விருத்தி, மூளைவிருத்தி ஆகியவற்றின் அபிவிருத்தியையும் பண்பாட்டையும் முன்னேற்றுதலும் அபிவிருத்திசெய்தலும் ;

(உ) தர்மம் பற்றிய போதனைகளையும் கலந்துரையாடல்களையும் பேச்சுக்களையும் நடாத்துதலும், சமய முயற்சிகளில் பங்குபற்றுதலும் ; அத்துடன்

(ஊ) மேற்கூறிய நோக்கங்களையும் குறிக்கோள்களையும் மேம்படுத்துவதற்கு அவசியமானவையும், விரும்பத்தக்கவையுமான வேறு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல்.

முகாமைச் சபை.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போது வலுவிலுள்ளனவான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் அப்போது வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்டமைந்த முகாமைச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதியில் பதவிவகிக்கும் கழகத்தின் முகாமைச் சபையின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

5. (1) உறுப்பினரின் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும், உறுப்பினரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை நீக்குதல் என்பவற்றுக்காகவும், முகாமைச் சபையினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும், அத்துடன் வேறு வகையில் பொதுவாக அதன் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காகவும் காலத்துக்குக்காலம் விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேவிதமான கூட்டமொன்றில் (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய, மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) அப்போதைக்கு வலுவுள்ளதாயிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதியெதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய எவ்விதியும், கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குக்கொண்டன்றி மாற்றப்படலாகாது, திருத்தப்படலாகாது, நீக்கப்படலாகாது அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது :

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய மாற்றம், திருத்தம், நீக்கம் அல்லது சேர்க்கை முகாமைச் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதியில் வலுவிலுள்ளவையான கழகத்தின் விதிகள் இப்பிரிவின்கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் யாவரும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

6. இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கழகத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்; கழகத்துக்குச் சேர்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

கழகத்தினால் செலுத்தப்படவுள்ள கடன்களும் கழகத்துக்குச் செலுத்தப்படவுள்ள கடன்களும்.

7. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைச் சபையின் இரு உறுப்பினரது முன்னிலையிலல்லாமல் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது; அவர்கள் சமூகமாகயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராக இடும் கையொப்பத்தினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டுமென்பது.

8. (அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பன வகையாக அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதையேனும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய, சட்டப்படி தகுதியுடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவற்றை விற்கவும், ஈடுவைக்கவும், குத்தகை கொடுக்கவும், கொடுத்துமாற்றவும் அல்லது வேறுவகையில் கையாளவும் கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய, சட்டப்படி தகுதியுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனம் வைத்திருக்கலாம்.

9. கூட்டுத்தாபனத்துக்கு அதன் குறிக்கோள்களை எய்துவதற்கென நிதிகளைத் திரட்டுவதும், அத்தகைய நோக்கத்துக்காக எவையேனும் ஈடுகளை, முறிகளை அல்லது கடப்பாடுகளை உருவாக்குவதும், நிறைவேற்றுவதும், அளிப்பதும், அல்லது வழங்குவதும் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு திரட்டப்படக்கூடிய தொகைகளின் கூட்டுமொத்தம், முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படும் பணத்தொகையை விஞ்சுதலாகாது.

கடன் வாங்குவதற்கான தத்துவங்கள்.

மீளளிப்பு.

10. கூட்டுத்தாபனத்தின் சார்பிலும் அதன் நன்மைக்கெனவும் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், முகவரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் அளவுக்கு, கூட்டுத்தாபனம் அத்தகைய உறுப்பினருக்கு, அலுவலருக்கு, முகவருக்கு அல்லது சேவையாளருக்கு மீளளிப்புக் கொடுத்தல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரச அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 506, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.